இ 2540

சைவ. ~~175~~ 177

உ

சிவமயம்

# சிவாலயப் பிரதக்ஷிண நமஸ்கார விதி.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTI
PAGANERI.

K. M. சுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்,
சிவன்கோவில் தெரு,
தேவகோட்டை.

விலை] 1940. [அணா 4.

உ540

17

உ

சிவமயம்.

# சிவாலயப் பிரதக்ஷிண நமஸ்கார விதி.

---

இஃது

சிரேஷ்டமாலிகை முதலிய நூல்களை இயற்றிய

கல்லிடைக்குறிச்சி ப்ரஹ்மஸ்ரீ

வா. முத்துகிருஷ்ண அய்யரவர்களுடைய கநிஷ்ட

குமாரரும், தேவகோட்டைச் சிவாகம சங்கத்தில்

ஸம்ஸ்கிருத பண்டிதராயிருந்தவருமான

வியாகரணசிரோமணி

**K. M. சுப்ரஹ்மண்ய சாஸ்திரிகளால்**

இயற்றப்பெற்று

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISVANATHAN CHETTIAR
PAGANERI

தேவகோட்டை

ஸ்ரீ பிரஹதம்பாள் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

---

கலியப்தம் 5041

விக்ரம-ஸு கார்த்திகை-மீ

1940

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

இதன் விலை] *Copy Right Reserved.* [அணா 4.

2540

உ

சிவமயம்.

# சிறப்புரை.

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள்
ஆதீனவித்துவானும், சைவசித்தாந்தப் பிரசாரகருமான
உயர்சைவத் திருவாளர்,

## ஆ. சக்திவேற் பிள்ளை அவர்களால்

இயற்றப்பெற்றது.

உடலுறு நோய்க்கு மருந்துபோன் றுயிரை
யுற்றுநின் றகன்றிடா தென்றும்
அடலுறும் பிறவி நோயறு மீச
னாலய தெரிசன மதனால்
திடமுற மருந்துண் போனதற் குரிய
திறத்தபத் தியமது தவறின்
உடலுறு நோய்மிக் கதிகதுன் பத்தை
யுஞற்றிடு மாங்கதே போல. (௧)

செப்புயிர்ப் பிணியைத் தீர்ப்பதா லயத்தின்
தெரிசன மெனினும்வெண் பிறையோ
டப்பணி சடில னுரைத்தவா கமங்க
ளறைதரு விதிமுறை யதுதான்

04826



றப்பிடிற் கொடிய பலப்பல பிறவி
சார்ந்துதுன் புறுவரீ தகல
வொப்பிலா வளஞ்சால் கல்லிடைக் குறிச்சி
யுயர்நகர் வேதியர் திலகர். (௨)

கல்லிடைக் கும்மி சிரேட்டமா லிகையா
ரியஜன போதினி முதலாம்
நல்லனூற் பலசொல் லியமுத்துக் கிருஷ்ண
நாமவே தியன்றவப் புதல்வன்
மல்லல்சேர் தவத்துச் சுப்பிர மணிய
மறையவன் மாந்தர்கள் பிறவி
யல்லலைத் தவிர்ப்பான் சிவாலய விதியை
யாகமந் தன்னினின் றெடுத்து. (௩)

சிவாலயப் பிரதட் சணநமஸ் கார
விதியெனத் திருப்பெயர் சூட்டி
யவாவுட னொருநூ லறைந்தன னரன்ற
னடிமலர் தன்னிடை யென்றுந்
தவாதபே ரன்பு சார்ந்தபே ரறிஞர்
தாணியி னிருளினை மாற்று
முவாமதி யென்ன வுரைத்திட விந்த
வுத்தம னூழிவா ழியவே. (௪)

சிவமயம்.

# மதிப்புரை.

" கற்றதனாலாய பயன் என் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்."

" சிவாலயப் பிரதக்ஷிண நமஸ்கார விதி " என்னும் இவ்விதச் சிறந்த நூல் ஒன்றை நம்மனோர் பொருட்டு வெளியிடவேண்டும் என்னுமவாவைப் பரமேசுவரனது இச்சா சக்தி உண்டாக்கியதற்கு இணங்க அவரது அருட்பிரவாஹத்தையும், அவரும் பெரியோர்களும் அருளிய சாஸ்திரத்தையும் துணையாகக் கொண்டு எனது ஆப்தர் வியாகரண சிரோமணி கல்லிடைக்குறிச்சி ப்ரஹ்மஸ்ரீ **K. M.** சுப்ரஹ்மண்ய சாஸ்திரீயார் அவர்கள் பூர்த்திசெய்து உதவியிருக்கிறார்கள்.

இதில், சிவம் என்பது கடவுள் என்றும், ஆலயம் என்பது அவர் எழுந்தருளி யிருக்கும் இடம் என்றும், பிரதக்ஷிணம் என்பது அங்கு சென்று அவரைத் தரிசித்து அவரையும் அவ்வாலயத்

தையும் சுற்றி வருதல் என்றும், நமஸ்காரம் என்பது அவரையும், ஆலயத்தையும் வணங்குதல் என்றும், விதி என்பது கட்டளை என்றும் பொருள் ஆகும்.

ஆகவே, இந்த நூல் சிவாலயப் பிரதக்ஷிணம், நமஸ்காரம் இவைகளின் விரிவு-காலம்-முறை-பலன் இவைகளை சாங்கோபாங்கமாக விளக்குகின்றது.

ஆகையால், ஒவ்வொருவரும் இக்காலத்து இந்நூல் வழி ஒழுகி இதனாலாய இகபர சாதகங்களைப் பெற்று உய்யும்படிக்கும், இந்நூலைப்போல் இன்னும் அரிய பெரிய பலநூல்களை வெளியிடும்படி இதனை ஆக்கியோருக்கு நீண்ட ஆயுளையும், தக்க திறமைகளையும் அருளும்படிக்கும் எல்லாம் வல்ல சிவபரம்பொருளினது திருவருளைப் பிரார்த்தித்து வணங்குகின்றேன்.

"கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான்
தாளை வணங்காத் தலை"

17—10—1940. } இங்ஙனம்,
தேவகோட்டை. } சோ. சண்முக முதலியார்.

# பதிப்புரை.

வேதாகமங்களில் விதிக்கப்பெற்ற விதிகளை அநுட்டிப்பவர்களுக்கு இம்மை மறுமைகளில் எல்லா நன்மைகளையும் தரக்கூடிய புண்ணியம் சாஸ்திரப்படி சித்திப்பதுடன், சரீரப்பயிற்சி நூலுக்கிணங்க ஆரோக்கியமும், திடமும் கண்கூடாகச் சித்திக்குமென்பதும் நுண்ணறிவாளரின் ஆராய்ச்சித் துணிபு; இதற்கு இந்நூலிற் கூறப்பெற்ற பிரதக்ஷிண நமஸ்காரங்களே போதுமானது.

இந் நூலைக்கண்டு அன்புடன் ஆதரித்துச் சரிபார்த்து உதவிய ஸ்ரீமாந், சிவநேசச்செல்வர் தேவகோட்டை, மே அரு. நா. ராமநாதஞ் செட்டியார் அவர்களுக்கும், இந்நூல் அச்சானபின் அன்புடன் ஆதரித்துச் சரிபார்த்து உதவிய தேவகோட்டைச் சிவாகம சங்க பரிபாலகர் ஸ்ரீமாந், சிவநேசச்செல்வர், அள. சுப. பள. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்களுக்கும் எனது அன்பார்ந்த நன்றியறிதலைச் செலுத்துகின்றேன்.

இந்நூலை அச்சிடுதற்கு ஊக்குவித்தும் பிரதி புரூப் இவைகளைச் சரிபார்த்தும் தந்துதவிய எனது நண்பர் தேவகோட்டை, உயர் சைவத் திருவாளர், சோ. சண்முக முதலியார் அவர்களுக்கு எனது நன்றியறிதல் உரித்தாகுக.

இந்நூலைப் பார்வையிட்டுத் தந்துதவிய திருப்புடமருதூர் சிவஸ்ரீ சு. ராமலிங்க பட்டர் அவர்களுக்கு மனமார்ந்த வந்தனங்கள்.

இப்புத்தகத்தைச் சிறுவர்களுக்கு வீட்டுப் பாடங்களாக்கி அநுட்டிக்கச் செய்யும் பெரியோர்களுக்கும், கலாசாலைகளில் பாடப் புத்தகங்களாக்கி அநுட்டிக்கச்செய்யும் கலாசாலை அதிகாரிகளுக்கும், அன்புடன் வாங்கி அநுட்டிக்கும் சிவபக்தர்களுக்கும், இயன்றவரை இப்புத்தகங்களைக் கிரயத்துக்கு வாங்கி இலவசமாக உதவி யாவரையும் அநுட்டிக்கச் செய்யும் கொடை வள்ளல்களாகிய சிவபக்த சிகாமணிகளுக்கும் சிவபெருமான் கிருபை உரியதாகும்.

24—11—40. இங்ஙனம்,<br>
தேவகோட்டை K. M. சுப்பிரமணிய சாஸ்திரி.

# பொருளடக்கம்.

---


| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| எங்கும் நிறைந்த கடவுளை ஆலயங்களில் வழிபடல் | 1 |
| கோபுரத்தை நமஸ்கரித்தல் | 2 |
| சிவலிங்க தரிசன பலன் | 3 |
| தரிசன காலம் | ,, |
| தேங்காய் பழங்கள் கொண்டுபோதல் | 4 |
| புஷ்கரிணீ மஹிமை | ,, |
| சிவதரிசன விதி | 5 |
| பலிபீடம், கொடிமரம், விருஷபம் இம் மூன்றுக்கும் பரஸ்பரம் ஸ்தான பேதங் கூறல். | ,, |
| சிதறு தேங்காய் விடல் | 7 |
| பிரதக்ஷிணம் செய்வதாலுண்டாகும் பயன் | 9 |
| பிரதக்ஷிணம் என்னும் சப்தத்திற்குப் பொருள் | 10 |
| பிரதக்ஷிணத்திற்கு நான்கு அங்கங்களாவன | ,, |

| | |
|---|---|
| ஒன்பது வகைப் பிரதக்ஷிணங்கள் | 11 |
| ஸவ்யப் பிரதக்ஷிணம் | 12 |
| அபஸவ்யப் பிரதக்ஷிணம் | ,, |
| ஸவ்யாபஸவ்ய (சோம சூத்திர)ப் பிரதக்ஷிணம் | ,, |
| சோமசூத்திரப் பிரதக்ஷிணஞ் செய்யத்தகாத இடம் | 14 |
| ஸவ்யம், அபஸவ்யம், ஸவ்யாபஸவ்யம் ஆகிய மூன்று பிரதக்ஷிணங்களுக்கும் அதிகாரிகள் | ,, |
| சக்ரப் பிரதக்ஷிணம் | 15 |
| பத்மப் பிரதக்ஷிணம், ஸிம்ஹ பிரதக்ஷிணம் | 16 |
| சிருங்கலாப் பிரதக்ஷிணம் | ,, |
| நாகவக்கிரப் பிரதக்ஷிணம் | 17 |
| அங்கப் பிரதக்ஷிணம் | ,, |
| பிரதக்ஷிணஞ் செய்வதில், பிராகாரங்களின் வேற்றுமையால் சித்திக்கும் பயன்களின் பேதம் | 18 |
| மூன்று முறை பிரதக்ஷிணம் செய்வதாலுண்டாகும் மூவகைப் பலன்கள் | 19 |
| பிரதக்ஷிண ஸங்க்கியை | 20 |

| | |
|---|---|
| பிரதக்ஷிண காலபலன் | 21 |
| உத்ஸவ காலங்களில் சுவாமியைப் பின் தொடர்ந்து பிரதக்ஷிணம் செய்வதா லுண்டாகும் பலன் | 23 |
| ஈசுவரர், பலிபீடம் முதலியவற்றின் நடுவிற் செல்லக் கூடாமை | 24 |
| சோமசூத்திர நிர்ணயம் | 25 |
| அபிஷேக தீர்த்த மஹிமை | 26 |
| மனிதர் முதலியவர்களால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற லிங்கங்களை நமஸ்காரம், பிரதக்ஷிணம் செய்வதின்பலன் | 27 |
| சிவபெருமானை நமஸ்கரிப்பதின் பலன் | 28 |
| நமஸ்கரித்தல் என்னும் சப்தத்தின் பொருள் | ,, |
| சிவஸாந்நித்யமுள்ள ஸ்தானங்களை வணங்குதல் | 29 |
| நமஸ்காரம் செய்யும்போது விலக்கத்தக்கவை | ,, |
| நான்கு வகை நமஸ்காரங்கள் | 30 |
| அஷ்டாங்க நமஸ்காரம் | ,, |
| பஞ்சாங்க நமஸ்காரம் | 31 |
| த்ரயங்க நமஸ்காரம் | 32 |
| ஏகாங்க நமஸ்காரம் | ,, |

| | |
|---|---|
| த்வயாங்க நமஸ்காரம் | 32 |
| த்ரயங்க நமஸ்காரம் | 33 |
| பஞ்சாங்க நமஸ்காரம் | ,, |
| அஷ்டாங்க நமஸ்காரம் | ,, |
| நமஸ்கார ஸங்க்கியை | ,, |
| தனித்தேவி ஆலயத்திற் செய்யவேண்டியவை | 34 |
| மிக்க பலனைத்தரும் மஹாப்ரதோஷ காலத்தில் செய்யவேண்டிய எட்டுக்காரியங்களுள் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் அடங்கியிருப்பதற்கு வசனம் | 35 |
| மஹாப்ரதோஷ காலத்தில் விலக்கவேண்டியவை | ,, |
| சிவாலயத்தில் விலக்கவேண்டிய குற்றங்கள் | ,, |
| சிவகைங்கரிய விதி | 37 |
| சிவகைங்கரிய பலன் | ,, |


---

சிவமயம்.

# சிவாலயப் பிரதக்ஷிண நமஸ்கார விதி.

## எங்கும் நிறைந்த கடவுளை ஆலயங்களில் வழிபடல்.

கடவுளின் சக்திகள் நினைக்க முடியாதவையாயும், வியப்பை உண்டுபண்ணுகிறவையாயும், பலவாயுமுள்ளன. ஆகையால் கடவுள் எல்லாப்பொருள்களோடும் கலந்திருப்பதுபோல் எல்லாப்பொருள்களையும் கடந்துமிருக்கின்றார். எனவே, மந்திரம் முதலியவற்றால் கடவுள் வெளிப்பட்டுத்தோன்றக்கூடிய இடமாகவிருப்பது ஆலயமென்ற பெயருடன் விளங்குகின்றது.

அன்றியும், எங்கும் நிறைந்தவுயிர் சரீரத்தைத் துணையாகக்கொண்டு தோன்றுவது போலும், அர

ணியில்முழுதும் வியாபித்திருக்கும் தீயானது கடைதற்சூழிலால் கடையப்பெற்ற விடத்தில் வெளிப்படுவது போலும், மந்திரம் தந்திரம் இவற்றின்மஹிமையால் கடவுள் ஆலயங்களில் வெளிப்படுகிறார்.

நெருப்பு தானாகவே பிரகாசமுடையதாயினும் காலபேதத்தால் சாம்பல்பூத்திருப்பின் ஊதுதலாகிய கிரியையால் வெளிப்பட்டுத் தோன்றுவது போல, கடவுள் தானாவே பிரகாசிக்கின்றவரா யிருப்பினும் ஆன்மாக்களின் மனம் வேறிடங்களில் வியாபித்திருப்பதால் அவர்களைக் குறித்து கடவுள் அநுக்கிரஹிக்கும் நோக்கத்துடன்மற்றவிடங்களில் வெளிப்பட்டுத் தோன்றாமல் ஊதுதலாகிய கிரியைபோன்ற மந்திரக் கிரியையால் வெளிப்படுதற்குரிய ஆலயம், மண்டலம், யந்திரம் முதலியவைகளில் கடவுள் சேவிப்பவர்களுக்கு அநுக்கிரஹிக்கும் நோக்கத்துடன் விளங்கிக் கொண்டிருக்கின்றார்.

### கோபுரத்தை நமஸ்கரித்தல்.

வெகுதூரத்தில் வரும் பொழுதே கோபுர சிகரத்தைக் கண்டதும் அவ்விடத்திலேயே எவன்வணங்

குகிருனே அவன் எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுகிருன்.

## சிவலிங்க தரிசன பலன்.

சிவலிங்கத்தைத் தரிசனம் செய்வதாலுண்டாகும் பலனானது மஹாமேருபர்வதத்திற்குச் சமமான சுவர்ணங்களையும், கோடிகாமதேனுக்களையும், கோடி கன்னிகைகளையும் தானம் செய்வதாலுண்டாகும் பலத்திற்குச் சமமாகுமென்று அசிந்திய விசுவஸாதாக்யாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

## தரிசன காலம்.

உஷற்காலம், மத்யாஹ்னம், சாயங்காலம், உபசந்திகள் (பிரதானகாலங்களுக்குச் சமீபத்திலுள்ள மற்றக் காலங்கள்) ஆகிய பூஜாகாலங்களில் தரிசனம் செய்யவேண்டும். நித்திய நைமித்திக காலங்களில் சுவாமி வெளியிற் சென்றிருக்கும் பொழுதும், பலி சமர்ப்பிக்கும் பொழுதும், திரைபோட்டிருக்கும் சமயங்களிலும், மூலவிக்கிரஹத்தைத் தரிசித்தலாகாது * என்றுசுப்பிரபேதாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

---

* இச்சமயங்களில் உத்ஸவ விக்கிரஹத்தை அநுசரித்துக் கூடச்செல்லவேண்டும்.

## தேங்காய் பழங்கள் கொண்டுபோதல்.

சுத்தமான பாத்திரத்தில்வெடிப்பில்லாததாயும், அழுகலற்றதாயும், கண்கள் உள்ளதாயும், மிகப் பெரிதாகவேனும்மிகச்சிறிதாகவேனுமில்லாததாயும், ஜலமுள்ளதாயும், குடுமியுடன் கூடியதாயுமுள்ள தேங்காய், பக்குவமானபழங்கள், வெற்றிலை பாக்கு, சூடன், குங்குமம், வத்தி, வில்வம், சரம்,புஷ்பம், முதலியவற்றையும் அவரவர்களுடைய சக்திக்குத் தக்கவாறு மற்ற நிவேதனார்ஹமான பதார்த்தங்களையும் எடுத்துக்கொண்டு செல்லவேண்டும்.

## புஷ்கரிணீ மஹிமை.

அசிந்திய விசுவஸாதாக்ய மென்னுமாகமத்தில் "சிவாலயத்திற்குச்சமீபத்திலுள்ள தீர்த்தம் அசுத்தமாயிருப்பினும் சுத்தமாயிருப்பினும் சிவகங்கைக்குச் சமமாகும்; அதில் ஸ்நாநம் செய்பவன் ஏழுபிறவிகளிற் செய்த பாவங்களினின்றும் விடுபடுகிறான்" என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் தீர்த்தங்களைக் கெடுக்கலாகாது. சிரசில் தீர்த்தத்தைப்

புரோக்ஷித்துக் கொண்டு ஆலயத்திற்குள் செல்ல வேண்டும்.

## சிவதரிசன விதி

கோபுரத்துவாரத்திற்கு வெளியிலேனும், பலி பீடத்திறகு வெளியிலேனும் விமானத்திற்கு நமஸ்காரம்செய்யவேண்டும். பிறகு †பலிபீடம்,கொடிமரம், விருஷபதேவர் இவற்றிற்கு ‡ நமஸ்காரம் செய்து

---

† ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் போது

1. பலிபீடம், கொடிமரம், விருஷபம்
2. கொடிமரம், பலிபீடம், விருஷபம்
3. பலிபீடம், விருஷபம், கொடிமரம்

என்று மூன்றுவிதங்களாகப் பிரதிஷ்டைகள் அவ்வவ் ஆலயங்களில் காணப்படுகின்றன; இவற்றிற்கு ஆகமப்பிரமாணங்களும் இருக்கின்றன. எனவே அந்த அந்த ஆலயங்களில் பிரதிஷ்டைசெய்யப் பெற்றதற்கிணங்க முதலிலுள்ள பலி பீடத்தையேனும், கொடிமரத்தையேனும், வணங்குக.

‡ விருஷபத்தின் விருஷணத்தை வலது கையால் ஸ்பரிசித்துகொம்புகளின் இடைவழியாகச்சிவபெருமானைத் தரிசிக்கவேண்டும். விருஷபத்தின் விருஷணத்தில் எல்லாத் தீர்த்தங்களும் ஸாந்நித்யம் செய்கின்றன. ஸ்தல அர்ச்சகரும், அவரது உத்தரவு

"அந்த: ப்ரவேசே சிவதர்சநேச சிவார்ச்சநேதத்பல லாபே | தேஹ்யப்யநுஜ்ஞாம்பகவந் ப்ரஸந்நஸ் த்வத் பாதபத்ம ப்ரணதாயமஹ்யம் ||"

"ஆலயத்திற்குள் செல்லுதற்கும் சிவபெருமானைத் தரிசித்தற்கும் அருச்சித்தற்கும் அப்பயனை அடைதற்கும் நும் பாதகமலங்களில் வணங்கிய எனக்குத் தேவரீர் உத்தரவு தந்தருள வேண்டு" மென்றுவிருஷபதேவரைப் பிரார்த்தித்துப் பலிபீடத்திற்கு முன் மூன்று முறை ஸாஷ்டாங்கமாகச் சிவபெருமானைநமஸ்கரிக்க வேண்டும். பின், மூன்று முதலிய ஸங்கியையை அநுசரித்துப் பிரதக்ஷிணம்செய்து துவாரபாலர், நந்திகேசுவரர் இவர்களை வணங்கி இவர்களுடைய உத்தரவு பெற்று உள்ளே பிரவேசித்து மஸ்தகத்தில் குட்டிக்கொண்டு விநாயகரை வணங்கி சிதறு தேங்காய் விடல் போடவேண்டும்.

---

பெற்று கைங்கரியம் செய்பவருமே விக்கிரஹங்களை ஸ்பரிசிக்கக்கூடுமாகலின், மற்றவர்கள் ஸ்பரிசிக்காமல் தொடுதலாலாகிய பலன் சித்திக்க வேண்டுமென்று பிரார்த்தித்து வணங்கி கொம்புகளின் இடைவழியாகச் சிவபெருமானைத்தரிசிக்கவேண்டும்.

## சிதறுதேங்காய் விடல்.

விநாயகருக்கு முன்பாக விடல்போடவேண்டும். ரோகம் முதலியன நீங்குதற்காக கூட்டத்தில் விடல் போடவேண்டும்; புத்திரப் பேற்றை விரும்புகிறவன் நூறு தேங்காய்களையும், தான்யம் தனம், இவற்றின் விருத்தியை விரும்புகிறவன் ஐம்பது தேங்காய்களை யும், கன்னிகையை விரும்புகிறவன் இருபது தேங் காய்களையும், ஜயத்தை விரும்புகிறவன் பதினறு தேங்காய்களையும், புண்ணிய தீர்த்தங்களின் பலத் தை விரும்புகிறவன் பதினன்கு தேங்காய்களையும், எல்லா இஷ்ட சித்திகளையும் விரும்புகிறவன் ஆயி ரம் தேங்காய்களையும் விடல் போடவேண்டும்.

பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், தீனர்கள், குருடர்கள் இவர்களின் கூட்டத்தில் ஆயி ரம், எண்ணூறு, ஐந்நூறு, முன்னூறு, நூற்றெட்டு, ஐம்பது, இருபத்தொன்று, எட்டு, ஏழு, ஐந்து, மூன்று, ஒன்று ஆகிய எண்ணுள் யாதானுமொரு எண்ணை அநுசரித்துத் தேங்காய்களை விடல் போடவேண்டும்.

இவ்வாறு செய்தால் ஜயம், மோக்ஷம் இவை சித்திக்கும். விசேஷமாக அடியார்களின் கூட்டத்தில் விடல் போடவேண்டும்.

பின்னர், மண்டபத்திற்குள் பிரவேசித்து சிவ பெருமானை வணங்கி தலையிலேனும் மார்பிலேனும் அஞ்சலி செய்து அவரவர்களுக்குரியவாறு வைதிக ஸ்தோத்திரம், ஆகமஸ்தோத்திரம், புராண ஸ்தோத்திரம், தேவாரம் முதலியவைகளால் ஸ்தோத்திரம் செய்யவேண்டும். இவ்வாறே நடராஜா முதலிய மூர்த்திகளையும் துதி செய்து வணங்கி அர்ச்சகரால் அர்ச்சனையைச் செய்து பிரஸாதம் பெற்று சண்டேசுவரரை ஸ்தோத்திரம் செய்து வணங்கி,

“ நீலகண்டபதாம்போஜ பரிஸ்புரிதமாநஸ ।
சம்போஸ்ஸேவாபலம் தேஹி சண்டேச்வர
நமோஸ்துதே ॥ ”

“ சிவபெருமானுடைய பாதகமலங்களைச்சிந்திக்கும் மனமுடைய, ஓ! சண்டேசுவர ! சிவபெருமானைத் தரிசித்ததால் உண்டாகும் பலனைத் தந்தருள

வேண்டுமென்று பிரார்த்தித்து கோபுரவாயிலுக்கு வந்து,

"மஹாபலி முகாஸ்ஸர்வே சிவாஞ் ஞாபரிபாலகா: I
மயாநிவர்த்திதாயூயம் கச்சதேச்வர ஸந்நிதிம் II"

"சிவபெருமானுடைய ஆணையின்படி நடக்கும் மஹாபலி முதலிய சிவபக்தர்களே! துணைவந்தது போதும்; திரும்பிச் சிவபெருமானுடைய ஸந்நிதிக்குச் செல்லுங்கள்" என்று நல் வார்த்தை கூறிச் சற்று நேரம் உட்கார்ந்து பின்னர் தம் தம் கிரஹங்களுக்குச் செல்லவேண்டும்.

## பிரதக்ஷிணம் செய்வதாலுண்டாகும் பயன்.

எல்லா ரோகங்களும் நாசமடையும்; துக்கங்கள் விலகும்; எல்லாப் பாபங்களும் நீங்கும்; ஆயுள், பலம், ஆரோக்யம், அபமிருத்யுவின் நீக்கம் இவையுண்டாகும்; ஸமஸ்தமான தானங்கள், தபசு, யாகம் செய்வதாலுண்டாகும் பலன் கிடைக்கும்; அறிவு, வெற்றி, தனம், அணிமா முதலிய அஷ்டைசுவரியங்கள் சித்திக்கும்; இம்மையில் எல்லாப் போகங்களை

யும் பெற்று மறுமையில் ருத்திர லோகங்கிடைக்கும்; பிறவி என்னும் பிணி விலகும்.

## பிரதக்ஷிணம் என்னும் சப்தத்திற்குப் பொருள்.

அம்சுமான் என்னுமாகமத்தில் ப்ர என்னுமக்ஷரம் எல்லாப் பயங்களையும் போக்கும்; த என்னுமக்ஷரம் மோக்ஷத்தைக் கொடுக்கும்; க்ஷி என்னுமக்ஷரம் ரோகங்களைப் போக்கும்; ண என்னு மக்ஷரம் அமிருதத்தைக் கொடுக்கும், என்பது பிரதக்ஷிணம் என்னும் சப்தத்திற்குப்பொருள் என்று கூறப்பட்டிருக்கின்றது; எனவே, பிரதக்ஷிணம் என்னும் பதம் "ரோகங்களையும் எல்லாப்பயங்களையும் போக்கி, அமிருதத்தையும் மோக்ஷத்தையும் தரும்" என்னும் பொருள் கொள்ளக்கிடக்கின்றது.

## பிரதக்ஷிணத்திற்கு நான்கு அங்கங்களாவன.

1. அடிமேல் அடிவைத்துச் செல்லுதல்.
2. இரு கைகளையும் அசைக்காது குவித்துக் கொள்ளுதல்.
3. ஸ்தோத்திரம் செய்தல்.

4. சிவபெருமானைத் தியானித்தல். பூர்ணகர்ப்பிணியானவள் எண்ணெய் நிறைந்த குடத்தைத் தூக்கிக்கொண்டு மெதுவாகச் செல்லுவது போல் செல்ல வேண்டும்.

## ஒன்பது வகைப் பிரதக்ஷிணங்கள்.

1. ஸவ்யப் பிரதக்ஷிணம்.
2. அபஸவ்யப் பிரதக்ஷிணம்.
3. ஸவ்யாபஸவ்ய ப்ரதக்ஷிணம்.
4. சக்ரப்ரதக்ஷிணம்.
5. பத்மப்பிரதக்ஷிணம்.
6. ஸிம்ஹப்ரதக்ஷிணம்.
7. சிருங்கலா ப்ரதக்ஷிணம்.
8. நாகவக்ர ப்ரதக்ஷிணம்.
9. அங்கப்ரதக்ஷிணம்.

எனப் பிரதக்ஷிணம் ஒன்பது வகைப்படுமென்பதும், இவற்றைச் செய்ய வேண்டிய முறையும் அம்சுமானுகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

## ஸவ்யப் பிரதக்ஷிணம்.

சிவபெருமானின் முன் சிரசிலேனும் மார்பிலே னும் கைகளைக் கூப்பிக்கொண்டு, கிழக்குத் திக்கு முதல் கிழக்குத் திக்கு வரை வலமாகச் சென்று வருதல் ஸவ்யப்ரதக்ஷிணமாகும்.

## அபஸவ்யப் பிரதக்ஷிணம்.

கிழக்குத் திக்கு முதல் கிழக்குத் திக்கு வரை இடமாகச் சென்று வருதல் அபஸவ்யப்ரதக்ஷிணமாகும்; இந்த அபஸவ்ய ப்ரதக்ஷிணத்தைச் செய்வதற்கு ஸந்யாஸிகளுக்கே உரிமையுண்டு.

## ஸவ்யாபஸவ்யப் பிரதக்ஷிணம்.

இது சோமசூத்திரப் பிரதக்ஷிண மெனப்படும். முதலாவது விருஷபதேவரையும், பின்னர் இடமாகச் சென்று சண்டரையும், அதன்பின் சென்றவழியே திரும்பிவந்து மீண்டும் விருஷபதேவரைத் தரிசித்து, அங்கிருந்து வலமாகச் சென்று சோமசூத்திரம்வரை சென்று (அதாவது சோமசூத்திரமாகிய அபிஷேக தீர்த்தம் செல்லும் வழியைக்கடவாது) சென்ற வழி

யே திரும்பிவந்து விருஷப தேவரைத் தரிசித்து, அங்கிருந்து இடமாகச்சென்று சண்டேசுவரரைத் தரிசித்து, பின்னர் சோமசூத்திரம் வரை சென்று, மீண்டும்சண்டரைத் தரிசித்து, விருஷபதேவரைத் தரிசிக்கவேண்டும்.

இவ்வாறு செய்யும் பிரதக்ஷிணத்தில் விருஷப தேவரை நான்குமுறையும், சண்டேசுவரரை மூன்று முறையும், சோமசூத்திரத்தை இரண்டு முறையும் தரிசித்ததாக ஆகின்றது.

சோமசூத்திரப் பிரதக்ஷிணம் செய்யும் போது விருஷபதேவர், சண்டேசுவரர், விருஷபதேவர், சோமசூத்திரம், விருஷபதேவர், சண்டேசுவரர், சோமசூத்திரம், சண்டேசுவரர், விருஷபதேவர் ஆகிய ஒன்பது ஸ்தானங்களிலும் ஒவ்வொன்ருக மொத்தம் ஒன்பது ஆத்மப் பிரதக்ஷிணங்களை அந்த அந்தச்சமயங்களில் செய்யவேண்டும்.

மஹாப்ரதோஷ காலத்தில் சோமசூத்திரப் பிர தக்ஷிணம் செய்யவேண்டுமென்று சிவார்ச்சனு சந்

திரிகை என்னும் நூலில் அப்பயதீக்ஷிதர் கூறியிருக்கிறார்.

## சோமசூத்திரப் பிரதக்ஷிணம் செய்யத்தகாத இடம்.

இரண்டு சோமசூத்திரங்களேனும், விஷ்ணு ஆலயமேனும் எந்த ஆலயத்தில் ஓரேபிராகாரத்தில் இருக்கின்றனவோ அந்த ஆலயத்தில் இடது பக்கமாகப் பிரதக்ஷிணம் செய்யக்கூடாதென்றும், வலது பக்கமாகவே பிரதக்ஷிணம் செய்யவேண்டுமென்றும் விரோத விதியிருப்பதால் இந்த இடங்களில் சோமசூத்திரப்பிரதக்ஷிணம்செய்யலாகாது; ஓரேபிராகாரத்தில் தேவி ஆலயத்துடனேனும், விஷ்ணுவாலயத்துடனேனும் சேராத தனிச் சிவாலயத்திற்றான் சோமசூத்திரப் பிரதக்ஷிணஞ் செய்யவேண்டும்.

## ஸவ்யம், அபஸவ்யம், ஸவ்யாபஸவ்யம் ஆகிய மூன்று பிரதக்ஷிணங்களுக்கும் அதிகாரிகள்.

ஸவ்யப்பிரதக்ஷிணத்தை யாவரும் செய்யவேண்டுமென்பது ஒரு விதி; பிரமசாரிகளுக்கே சிறப்பாக உரியது என்பதும் மற்றொரு விதி. சோமசூத்திரப்

பிரதக்ஷிணத்தை கிருஹஸ்தர்கள், வானப்ரஸ்தர்கள் செய்யலாமென்பது ஒரு விதி; தீக்ஷை பெற்றவர்களே செய்யவேண்டுமென்பது மற்றொரு விதி.

அபஸவ்யப் பிரதக்ஷிணத்தை ஸந்யாஸிகள் செய்யவேண்டும்.

இம் மூன்று பிரதக்ஷிணங்களையும் * கிழக்குத் திக்கு முதல் கிழக்குத் திக்கு முடிவாகச் செய்ய வேண்டும்.

!சோமசூத்திரப் பிரதக்ஷிணத்தை சோமசூத்திரம் முதற்கொண்டு சோமசூத்திரம் வரையேனும் செய்யலாம் என்று சிவார்ச்சனசந்திரிகையிற் கூறப்பட்டிருக்கின்றது.

---

* கிழக்கு அல்லாத மற்றச் சந்நிதிகளில் அந்தச் சந்நிதிகளுக்கு உரிய திசைமுதல் திசைவரைப் பிரதக்ஷிணம் செய்தல் வேண்டும்.

! சண்டேசுவரர் இல்லாத பிராகாரத்திற்கு இவ்விதி பொருத்தம்.

## சக்கிரப் பிரதக்ஷிணம்.

சிவபெருமான் சந்நிதியில் நின்றுகொண்டு தன்னைத்தானே வலமாகச் சுற்றுதல்; இது ஆன்மப் பிரதக்ஷிணம்.

## பத்மப் பிரதக்ஷிணம்.

இருதயத்தில் பத்ம முத்திரை செய்துகொண்டு விமானத்தைச்சுற்றி எட்டுத்திக்குக்களிலும் வணங்கி வலம் வருதல்.

## ஸிம்ஹப் பிரதக்ஷிணம்.

விழுந்து கும்பிட்டுக்கொண்டே நடந்துசெல்லுதல்.

## சிருங்கலாப் பிரதக்ஷிணம்.

கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, அக்கினி கோணம், நிருதி கோணம், வாயு கோணம், ஈசான கோணம் ஆகிய எட்டுத் திக்குகளிலும், இந்தத் திக்குக்களின் நடுவில் மூன்று மூன்று ஸ்தானங்களாக திக்குக்கள் எட்டுக்கு இருபத்து நான்கு ஸ்தானங்களிலும், ஆக முப்பத்திரண்டு ஸ்தானங்களில் விமா

னத்தைச் சுற்றிலும் இடுப்பில் அஞ்சலி செய்து சங்கிலி * போல் வளைந்து சுற்றி வருதல்.

## நாகவக்கிரப் பிரதக்ஷிணம்.

விமானத்தைச் சுற்றி முறையே பாம்பு போல் ! வளைந்து சுற்றி வருதல்.

## அங்கப் பிரதக்ஷிணம்.

காலடிகளை முழங்கால்கள், தொடைகள் இவற்றின் இடையில் வைத்துக் கொள்ளுதலாகிய ஸ்வஸ்திகத்தைச் செய்துகொண்டு மார்பில் கை விரல்களைச் சேர்த்து பூமியில் ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்தபடியே விமானத்தைச் சுற்றிலும் சக்கிரம் சுற்றிவருவது போல் சுற்றி வருதல்.

மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பன்னிரண்டு ஆகிய எண்களுள் யாதானுமொரு எண்ணை அநுசரித்து இந்தப் பிரதக்ஷிணங்களைச் செய்யவேண்டும்.

---

* ஆன்மப் பிரதக்ஷிணம்.

! நெளிவு நெளிவாக.

கோடி ஸங்க்யையாகச் செய்யப்படும் பிரதக்ஷிணங்கள் ஒரு முறை செய்யப்படும் அங்கப் பிரதக்ஷிணத்திற்குச் சமமாகு மென்று குமாரதந்திரத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

## பிரதக்ஷிணம் செய்வதில், பிராகாரங்களின் வேற்றுமையால் சித்திக்கும் பயன்களின் பேதம்.

கர்ப்ப கிருஹத்தில் சோமசூத்திரத்தைக் கடவாமல் அருச்சகரும், அந்தர் மண்டலத்தில் அதாவது இரண்டாவது பிராகாரத்தில் தீக்ஷை பெற்றவர்களும், அந்தர்ஹாரம் முதலியவற்றில் அதாவது மூன்ருவது பிராகாரம் முதலியவற்றில் அனைவரும் பிரதக்ஷிணம் செய்யவேண்டும்.

அந்தர்ஹாரத்தில் அதாவது மூன்ருவது பிராகாரத்தில் பிரதக்ஷிணஞ் செய்தால் ஒரு மடங்கும், மத்தியஹாரத்தில் அதாவது மதிலை ஒட்டி உள்ளிருக்கும் வீதியில் பிரதக்ஷிணஞ் செய்தால் மூன்று மடங்கும், மரியாதையில் அதாவது மதிலை ஒட்டி வெளியிலிருக்கும் வீதியில் பிரதக்ஷிணஞ் செய்தால்

நான்கு மடங்கும், மஹாமர்யாதையில் அதாவது இரத வீதியில் பிரதக்ஷிணஞ் செய்தால் ஐந்து மடங்கும், ஊரின் எல்லையில் பிரதக்ஷிணஞ் செய்தால் ஆறு மடங்கும் பலன் சித்திக்கும்.

இவ்வாறு சக்தி, காலம், அதிகாரம் என்னுமிவற்றிற்குரிமையான இடத்தில் இருபத்தொன்று, பதினைந்து, ஏழு, ஐந்து, மூன்று என்னுமிவற்றில் யாதானுமோர் எண்ணையுடைய பிரதக்ஷிணங்களைச் செய்யவேண்டும் என்று சிவார்ச்சனசந்திரிகையில் அப்பய தீக்ஷிதர் கூறியுள்ளார்.

ஐந்தாவது பிராகாரத்தில் சிவபெருமானுக்குச் செய்யப்படும் ஒரு பிரதக்ஷிணம் ஏழுதீவுகளையுடைய பூமியைக் கோடிப் பிரதக்ஷிணம் செய்வதால் உண்டாகும் பலத்திற்குச் சமமாகுமென்று ஸகலாகம ஸாரஸங்கிரஹத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

## மூன்று முறை பிரதக்ஷிணம் செய்வதாலுண்டாகும் மூவகைப் பலன்கள்.

பிரமநாரதீய மென்னும் நூலில் ஒரு பிரதக்ஷிணத்தால் பிரமஹத்தி விலகும்; இரண்டாவது பிர

தக்ஷிணத்தால் அதிகாரபதவி கிடைக்கும்; மூன்று வது பிரதக்ஷிணத்தால் இந்திர ஸம்பத்துக்கள் கிடைக்கும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

## பிரதக்ஷிண ஸங்க்கியை.

மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பன்னிரண்டு, பதினைந்து, இருபத்தொன்று, நூறு, ஆயிரம், பதினாயிரம், லக்ஷம், பத்துலக்ஷம், கோடிக் கணக்காகப் பிரதக்ஷிணங்கள் செய்யலாம்.

ஸ்மிருதி ஸங்கிரஹமென்னும் நூலில் விநாயகருக்கு ஒரு பிரதக்ஷிணமும், சூரியனுக்கு இரண்டு பிரதக்ஷிணங்களும், சிவபெருமானுக்கு மூன்று பிரதக்ஷிணங்களும், அம்பிகை,விஷ்ணு இவர்களுக்கு நான்கு பிரதக்ஷிணங்களும், அச்வத்த விருக்ஷத்திற்கு (அரசமரத்திற்கு) ஏழு பிரதக்ஷிணங்களும் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டிருப்பதாக ஸகலாகம ஸாரஸங்கிரஹத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

மிகவும் அவகாசமில்லாத சமயங்களில் சிவபெருமானுக்கு ஒரு பிரதக்ஷிணத்தையேனும் செய்ய

வேண்டுமென்று சிவார்ச்சனுசந்திரிகையிற் கூறப் பட்டிருக்கின்றது; ஒரு பிரதக்ஷிணம் செய்வதும், ஒரு கையால் நமஸ்காரம் செய்வதும் ஸம்பாதித்த புண்ணியத்தை நாசஞ் செய்யுமென்று வசனமிருத்த லால் "மிக்க அவகாசமில்லாத காலங்களில் ஒரு பிர தக்ஷிணத்தையாவது செய்யவேண்டும்" என்னும் வசனம் சிவதரிசனம் அவசியம் செய்யவேண்டு மென் பதை வலியுறுத்தவே.

## பிரதக்ஷிணகால பலன்

காலையில் பிரதக்ஷிணம் செய்தால் ரோகங்கள் நசிக்கும். மத்யாஹ்னத்தில் விரும்பியவை சித்திக் கும். சாயங்காலத்தில் எல்லாப்பாபங்களும் நீங்கும். அர்த்தயாமத்தில் மோக்ஷம் சித்திக்கும்.

அன்றியும், அஷ்டமீ, சதுர்தசீ, அமாவாஸ்யை, பௌர்ணமி, ஜந்ம நக்ஷத்திரம் O அநுஜந்ம நக்ஷத் திரம் ? உபஜந்ம நக்ஷத்திரம், திருவாதிரை, ஞாயிற்

O ஜந்ம நக்ஷத்திரத்திற்கு பத்தாவது நக்ஷத்திரம் அநுஜந்ம நக்ஷத்திரம்.

? பத்தொன்பதாவது நக்ஷத்திரம், உபஜந்ம நக்ஷத்திரம்.

றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, திருவாதிரை, கிருத்திகை, சிவ ராத்திரி, நவராத்திரி, விநாயகசதுர்த்தி, விநாயக ஷஷ்டி, ஸ்கந்தஷஷ்டி, விஷ்டி என்னும் கரணம், தக்ஷிணாயன புண்யகாலம், உத்தராயண புண்யகாலம், விஷுவம்—அதாவது சித்திரை மாதப் பிறப்பு, ஐப்பிசி மாதப் பிறப்புக்கள், சந்திர கிரஹணம், சூரிய கிரஹணம், பன்னிரு மாதப் பிறப்புக்கள், உத்ஸவ காலங்கள் ஆகிய இக் காலங்களில் நூறு மடங்கு அதிகமான பலன் கிடைக்கும்.

சிவார்ச்சனசந்திரிகையில் நாடோறும் ஈசுவர ஸேவை செய்ய முடியாவிட்டால் அஷ்டமீ முதலிய தினங்களில் ஸேவிக்க வேண்டும்; அஷ்டமியில் தரிசித்தால் எட்டு நாட்களிலும், பர்வாக்களில் தரிசித்தால் ஒரு பக்ஷத்திலும், சங்கிரமணத்தில் தரிசித்தால் ஒரு மாதத்திலும் செய்த பாபங்கள் நீங்கும்; பிரதோஷத்தில் தரிசித்தால் மனம் வாக்குக்காய மிவற்றால் சம்பாதித்த பெரும் பாவங்களும் நீங்கும்;

விஷுவம்—அயனம்—உபராகம் (கிரஹணம்) இவற்றில் தரிசித்தால் சிவபதம் கிடைக்கும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

குமாரதந்திரமென்னு மாகமத்தில் "காலையில் ஷண்முகரைப் பிரதக்ஷிணம் செய்தால் இஷ்டபோகங்களையும், மத்யாஹ்னத்தில் போகமோக்ஷங்களையும், இரவில் மோக்ஷத்தையுமளிக்கும்; ஸ்நானம்செய்து பரிசுத்தனாகவிருந்து நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு உபவாசத்துடன் பிரதக்ஷிணம் செய்யவேண்டும்; இவ்விதம் ஆயிரம் பிரதக்ஷிணங்கள் செய்தால் அச்வமேதயாகம் செய்தபலன் கிடைக்கும்; தக்ஷிணை கொடுத்து அந்யரால் செய்விக்கப்படும் பிரதக்ஷிணத்திற்குப் பாதிப்பலன் கிடைக்கும்" என்று கூறப்பட்டிருக்கின்றது.

## உத்ஸவ காலங்களில் சுவாமியைப் பின்தொடர்ந்து பிரதக்ஷிணம் செய்வதாலுண்டாகும் பலன்.

விருத்தர்கள், ஸ்திரீகள், குழந்தைகள், வாலிபர்கள், அலிகள், சௌக்யத்தை அனுபவிப்பவர்கள், அடியார்கள் ஆகிய இவர்கள் சிவபெருமானிடத்து

அன்புடன் உத்ஸவகாலங்களில் சுவாமியைப் பின் தொடர்ந்து சென்றால் ஒவ்வொரு அடிதோறும் அச்வமேதயாகம் செய்தபலன் கிடைக்கும்; எல்லாப் பாவங்களும் நீங்கும்; சிவபதமடைவார்கள் என்று சுப்ரபேதம், மகுடம் முதலிய ஆகமங்களிற் கூறப் பட்டிருக்கின்றது.

கொடியேற்றும் சமயத்தில் பிரதக்ஷிணம் செய் கிறவர்கள் இம்மையில் செல்வம், புத்திரர், பௌத் திரர்களை யுடையவர்களாக ஆவார்கள்.

சிவபெருமானுக்கு நித்தியோத்ஸவம் நடக்குங் கால் பிரதக்ஷிணம் செய்கிறவர்கள் ருத்திரர்களாக ஆவார்கள் என்றும் அசிந்திய விசுவசாதாக் யாகமத் திற் கூறப்பட்டிருக்கின்றது.

## ஈசுவரர், பலிபீடம் முதலியவற்றின் நடுவிற் செல்லக்கூடாமை.

ஈசுவரர்—பலிபீடம் இவற்றின் நடுவிலும், சண் டேசுவரர்—ஈசுவரர் இவர்களின் நடுவிலும், விருஷப தேவர்—ஈசுவரர் இவர்களின் நடுவிலும் செல்லக்

கூடாது. எந்த எந்தப் பிராகாரத்தில் பலிபீடம் விருஷபம் இவை இருக்கின்றனவோ அந்த அந்தப் பிராகாரத்தில் அவற்றையும் சேர்த்தேப் பிரதக்ஷி ணஞ் செய்யவேண்டும்.

## சோமசூத்திர நிர்ணயம்.

பிரதக்ஷிணம் செய்யும்போது கர்ப்பகிரஹம் —அந்தர் மண்டலங்களிலுள்ள அபிஷேக தீர்த் தம் செல்லும் வழியாகிய சோம சூத்திரத் தைத் தாண்டலாகாது; அதனைத் தாண்டாமலி ருப்பதற்காகவே கர்ப்பகிருஹத்தில் சோமசூத்திரம் முதற்கொண்டு வலது இடது பக்கமாகப் பிரதக்ஷி ணஞ் செய்யவேண்டும்; கர்ப்பகிருஹத்திற்கு வெளி யிலுள்ள அந்தர்மண்டலத்திலும் வலது இடது பக்கமாகவே பிரதக்ஷிணம் செய்யவேண்டும்.

விமானத்திற்கு வெளிப்பக்கத்தில் நாளமாகிய கோமுகியிலிருந்து விமானத்தின் நீளத்தின் அள வாகவேனும், அதில் பாதி அளவாகவேனும் அபி ஷேக தீர்த்தம் செல்லுமிடமே சோமசூத்திரமெனப் படும். அதைத் தாண்டினால் தோஷமுண்டாகும்;

சோமசூத்திரத்திற்கு வெளியில் தாண்டினல் குற்ற மில்லை. சோமசூத்திரத்தைத் தாண்டும்படி நேரிட்டால் புல்—பலகை—இலை—சிலை—மண்கட்டி முதலியவற்ருல் மூடிக்கொண்டு தாண்டல்வேண்டும்.

## அபிஷேக தீர்த்த மஹிமை.

அக்கினிஹோத்திரம் செய்யும் சிரோத்திரியரான பிராமணருக்குப் பதினயிரம் பசுக்களைத் தானம் செய்த பலன் சிவபெருமானுடைய அபிஷேக தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தவருக்குக் கிடைக்கும், என்று மகுடாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. பாத ஜலம் முதலிய நிர்மாலியங்களைப் பக்தியுடன் தரித்தல் மனம் வாக்குக் காயங்களாலுண்டான பாபங்களைப் போக்கும். சிவபெருமானுடைய அபிஷேக தீர்த்தத்தை அருந்துகிறவன் சுத்தாத்மாவான பிரமக் ஞானியாவான். நோயாளிகள், விஷத்தால் பீடிக்கப்பட்டவர்கள் இவர்கள் சிவநிர்மாலியத்தை அவசியம் தரிக்கவேண்டும். பிருது தீர்த்தம், மஹா தீர்த்தம், கங்கை, யமுனை, நர்மதா, சரயூ, கோதாவரீ, காவேரீ, தாம்ரபர்ணீ முதலிய உத்தம

தீர்த்தங்கள் சிவபெருமானுடைய அபிஷேக தீர்த்தத்தில் விளங்கிக்கொண்டிருக்கின்றன. அபிஷேக தீர்த்தத்தை அருந்தினால் க்ஷயம், குஷ்டம், ஜ்வரம், சுவாஸம் முதலிய ரோகங்கள் நீங்கும்.

## மனிதர் முதலியவர்களால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற லிங்கங்களை நமஸ்காரம், பிரதக்ஷிணம் செய்வதின் பலன்.

மாநுடர்களால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற லிங்கங்களை வணங்கினால் ஒருமடங்கும், இருஷிகளால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற லிங்கங்களை வணங்கினால் இரண்டு மடங்கும், தேவர்களால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற லிங்கங்களை வணங்கினால் மூன்று மடங்கும், விக்னேசுவரரால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற லிங்கங்களை வணங்கினால் நான்கு மடங்கும், சுயம்பு லிங்கத்தை வணங்கினால் ஐந்து மடங்கும் பலன் உண்டாகும்; இதுபோல் அசுரர்களால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற லிங்கம், பாண லிங்கம் இவற்றை வணங்கினால் அதிகமாகப் பலன்கள் கூறப்பட்டிருக்கின்றன.

## சிவபெருமானை நமஸ்கரிப்பதின் பலன்.

பரமேசுவரருடைய சந்நிதியில் பூமியில் தண்டாகாரமாக விழுந்து நமஸ்காரம் செய்கிறவனுடைய எல்லாப் பாபங்களும் சிதறி நாசமடைகின்றன; அப்பாபங்கள் நமஸ்காரம் செய்பவனுடன் மீண்டும் எழுந்திருக்கமாட்டா; விரும்பிய பொருள்களை அடைகிறான்; அச்வமேதம் செய்த பலனை அடைகிறான்; இந்திரன், பிரமன், விஷ்ணு இவர்களுடைய பதத்தை அடைகிறான்; கீழே விழுந்து வணங்கும்போது சரீரத்தில் எவ்வளவு புழுதிகளின் அணுக்கள் (துளிகள்) பற்றியிருக்கின்றனவோ அவ்வளவு அனேக வருஷகாலங்கள் சிவலோகத்தில் மேன்மையாக விளங்குகிறான்; சிவபெருமானுடன் சந்தோஷத்தை அடைகிறான்.

## நமஸ்கரித்தல் என்னும் சப்தத்தின் பொருள்

1. நம:- வணக்கம்.
2. என்னுடையதன்று.
3. பாச நீக்கம்.

கரித்தல்:- செய்தல் எனவே நமஸ்கரித்தல் என்பது வணக்கத்தைச் செய்தல்; என்னுடையதன்று என்னும் பாச நீக்கத்தைப் பிரார்த்தித்தல் ஆகும்.

## சிவஸாந்நித்யமுள்ள ஸ்தானங்களை வணங்குதல்.

விக்கிரஹம், லிங்கம், விமானம், பலிபீடம், சிவாலயம் ஆகிய இவற்றில் சிவபெருமான் எப்பொழுதும் ஸாந்நித்தியம் செய்கிறார்; ஆகையால் இவ்விடங்களில் எப்பொழுதும் சிவபெருமானை வணங்க வேண்டும்.

## நமஸ்காரம் செய்யும்போது விலக்கத் தக்கவை.

ஆடவர் இடைக்குமேல் தேகத்தை மறைத்துக் கொள்ளுதலும், சிவபெருமானுக்கு முன் பக்கம், பின் பக்கம், இடது பக்கம், கருப்பகிருஹம், ஒரு முறை அல்லது இரண்டு முறை நமஸ்கரித்தல், இவை நமஸ்காரம் செய்யும் பொழுது விலக்கத் தக்கவை. மேற்கு முகமாகவேனும், வடக்கு முகமாகவேனும் சிவலிங்கமிருந்தால் அதன் இடது பக்கத்தில் நமஸ்காரஞ் செய்யலாம்.

## நான்கு வகை நமஸ்காரங்கள்.

அஷ்டாங்கம், பஞ்சாங்கம், த்ர்யங்கம், ஏகாங்க மென நமஸ்காரங்கள் நான்கு வகைப்படும்.

## அஷ்டாங்க நமஸ்காரம்.

அஷ்டாங்க நமஸ்காரம் தண்டம் என்றும், தனி என்றும் இருவகைப்படும். அவற்றுள் தண்டமென் னும் அஷ்டாங்க நமஸ்காரமாவது கால்கள் இரண்டு, கைகளிரண்டு, மார்பு இரண்டு, சிரசு ஒன்று, வாக்கு ஒன்று ஆகிய எட்டுறுப்புக்களாலும் செய்யப்படுவது ஒரு முறை.

கால்கள், கைகள், மார்பு, சிரசு, வாக்கு, மனம், புத்தி, பார்வை என்னுமிவற்ருல் செய்யப்படு வது மற்ருெரு முறை.

கால்கள், முழங்கால்கள், கைகள், மார்பு, சிரசு, மனம், வாக்கு, பார்வை, என்னுமிவற்ருல் செய்யப் படுவது பிறிதொரு முறை.

கால்கள், புஜங்கள், சித்தம், மார்பு, சிரசு, மனம், வாக்கு, பார்வை என்னுமிவற்ருல் செய்யப்

படுவது வேறொரு முறை. இவ்வாறு தண்ட அஷ்டாங்க நமஸ்காரம் நான்கு வகைப்படும். மனம் என்பதற்கு வேறிடத்தில் மனத்தைச் செலுத்தாது சிவத்தியானத்துடன் நமஸ்கரித்தலையும், புத்தி என்பதற்கு சிவபெருமானுடைய மஹிமையை அநுஸந்தானஞ் செய்தலையும், சித்தம் என்பதற்கு சிவ சிந்தனை செய்தலையும், வாக்கு என்பதற்கு சிவஸ்தோத்திரம் செய்தலையும் கொள்ளவேண்டும்.

## தனி அஷ்டாங்க நமஸ்காரம்.

சிரசு ஒன்று, கைகளிரண்டு, காதுகளிரண்டு, மோவாய் ஒன்று, புய மிரண்டு என்னுமிவற்றை பூமியில் பொருந்தச் செய்வதாகும். கால்களின் துணையின்றி இந்தத் தனி அஷ்டாங்க நமஸ்காரம் செய்ய இயலாதாகையால் கால்களின்றி எண் குறிக்கப் பட்டிருக்கின்றது.

## பஞ்சாங்க நமஸ்காரம்.

சிரசு ஒன்று, கைகளிரண்டு, முழங்கால்களிரண்டு என்னுமிவற்றைப் பூமியில் பொருந்தச் செய்வது பஞ்சாங்க நமஸ்காரமெனப்படும்.

சிரசு ஒன்று, கைகளிரண்டு, புயமிரண்டு என்னுமிவற்றை முழங்காலில் பொருந்தச் செய்வதும் மற்றொரு பஞ்சாங்க நமஸ்காரம்.

## த்ரயங்க நமஸ்காரம்.

இரண்டு கைகளையும் சிரசில் குவித்துச் செய்வது

## ஏகாங்க நமஸ்காரம்

சிரசால் வணங்குவது ஏகாங்க நமஸ்காரமெனப்படும். இடம், காலம், சக்தி இவற்றை அநுசரித்து இந் நான்கு வித நமஸ்காரங்களைச் செய்யவேண்டும். இவ்வாறு சிவார்ச்சனை சந்திரிகையில் கூறப்பட்டிருக்கிறது.

அசிந்திய விசுவஸாதாக்யமென்னு மாகமத்தில் கூறப்பெற்ற முறை வருமாறு:— ஏகாங்கம், த்வயாங்கம், த்ரயங்கம், பஞ்சாங்கம், அஷ்டாங்கமென நமஸ்காரம் ஐந்து வகைப்படும். சிரசால் மாத்திரம் வணங்குவது ஏகாங்க நமஸ்காரம்.

சிரசாலும், வலது கையாலும் வணங்குவது த்வயாங்க நமஸ்காரம்.

சிரசாலும், இரண்டு கைகளாலும் வணங்குவது த்ரயங்க நமஸ்காரம். சிரசு, இரண்டு கைகள், இரண்டு கால்கள் இவற்ருல் வணங்குவது பஞ்சாங்க நமஸகாரம்.

சிரசு, மோவாய், இரண்டு காதுகள், இரண்டு முழங்கால்கள், இரண்டு கைகள் இவற்ருல் வணங்குவது அஷ்டாங்க நமஸ்காரம் என்பதாம்.

## நமஸ்கார ஸங்கியை.

தீப்தாகமத்தில் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பன்னிரண்டு என்னும் ஸங்க்யையாக நமஸ்காரம் செய்யவேண்டுமென்று கூறப் பெற்றிருக்கின்றது.

## சண்டேசுவரரைப் பிரார்த்தித்தபின் செய்யவேண்டியவை.

வலமாக வந்து விருஷபதேவருடைய கொம்புகளின் நடுவில் பரமசிவனைத் தரிசித்து பலிபீடத்திற்கு இப்பால் மூன்று முறை ஸாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து பஞ்சாக்ஷரத்தைச் சக்திக்குத் தக்கவாறு ஜபிக்கவேண்டும்.

## தனித்தேவி ஆலயத்திற் செய்யவேண்டியவை.

தேவி ஆலயத்தில் பலிபீடத்திற்கு இப்பால் நான்குதர முதலாக இரட்டித்த முறையில் நமஸ் கரித்து, இரட்டித்த முறையில் தேவியைப் பிரதக்ஷி ணஞ் செய்து, மீண்டும் சந்நிதியில் நமஸ்காரஞ் செய்து, துவாரபாலிகைகளை வணங்கி உத்தரவு பெற்று, உள்ளே பிரவேசித்து, விக்கிநேசுவரரை வணங்கி, அம்பாள் சந்நிதியை அடைந்து, அர்ச்சக ரால் அர்ச்சனையைச் செய்து பிரஸாதம் பெற்று, பரி வார சக்திகளையும், விநாயகர், சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகளையும் வணங்கி, சண்டேசுவரியின் சந்நிதி யிற் சென்று வணங்கி "தேவியாரைத் தரிசனம் செய்ததால் உண்டான பலத்தைத்தந்தருளவேண்டு" மென்று பிரார்த்தித்து, வலமாக தேவியார் சந்நிதியை அடைந்து, நான்கு முறை நமஸ்கரித்து தேவீ மூல மந்திரத்தைச் சக்திக்குத் தக்கவாறு ஜபஞ் செய்ய வேண்டும்.

## மிக்க பலனைத்தரும் மஹாப்ரதோஷ காலத்தில் செய்யவேண்டிய எட்டுக் கார்யங்களுள் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் அடங்கியிருப்பதற்கு வசனம்.

மஹாப்பிரதோஷ காலத்தில் சிவ பூஜை, சிவத்தியானம், சிவ ஸ்தோத்ரம், சிவ கீதம், சிவப்பிரதக்ஷிணம், சிவநாமஸங்கீர்த்தனம், சிவ நமஸ்காரம், சிவ கைங்கரியம் ஆகிய எட்டும் செய்யவேண்டியவை.

## மஹாப்பிரதோஷ காலத்தில் விலக்கவேண்டியவை.

பிரயாணம், போஜனம், எண்ணெய் தேய்த்து நீராடல், பஞ்சாக்ஷரத்தையின்றி மற்ற மந்திரங்களை ஜபித்தல், அத்யயனஞ் செய்தல், மைதுனம், தபசு, விஷ்ணுவை ஸேவித்தல் ஆகிய எட்டுக் கார்யங்களையும் மஹாப்பிரதோஷ காலத்தில் விலக்க வேண்டியதென்று ஸகலாகமஸாரஸங்கிரஹத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

## சிவாலயத்தில் விலக்கவேண்டிய குற்றங்கள்.

சிவாலயத்துள் வாஹனத்தின்மீது ஆரோகணஞ் செய்தல், பாதரக்ஷையுடன் சஞ்சரித்தல், கோபுரப்

பிரதிமையின் நிழலைத் தாண்டுதல், வெளியில் எறியப்பெற்ற நிர்மாலியத்தைத் தீண்டுதல், அதனைத் தாண்டுதல், சிவபெருமான், பலிபீடம் இவற்றின் இடையில் போதல், பெண்களைத் தொடுதல், ஆசையுடன் அவர்களைப் பார்த்தல், பயனற்று நகைத்தல், பயனற்றுப் பாடுதல், சம்பாஷணை செய்தல், உத்தரீயத்துடன் பிரதக்ஷிணம்-நமஸ்கார மிவற்றைச் செய்தல், ஒரு கையால் நமஸ்கரித்தல், சிவபெருமானின் இடப்பக்கத்தில் நமஸ்கரித்தல், அகாலத்தில் நமஸ்கரித்தல், சோமசூத்திரத்தைத் தாண்டுதல், கைகால்களைக் கழுவிச்சுத்தஞ்செய்து கொள்ளாமல் ஆலயத்துள் செல்லுதல், அநாசாரத்துடன் ஆலயஞ் செல்லுதல், காது-மூக்கு-கண் இவற்றிலுண்டாகும் மலங்களைக் கழித்தல், மலஜலங்கழித்தல், தலைவிரித்துக்கோதுதல், சிவபெருமானுக்குத்தன் முதுகைக் காண்பித்துச் செல்லுதல், பொய் சொல்லுதல், துப்புதல் முதலிய குற்றங்களைச் சிவாலயத்திற் செய்யலாகாது.

## சிவ கைங்கரிய விதி

ஈசுவரனைச் சேவிக்கும் யாவரும் அவரவர்கள் சக்திக்குத் தக்கவாறு கிராமங்கள், ஆபரணங்கள் முதல் தேங்காய், பழம், கற்கண்டு, பத்ரபுஷ்ப மீருக வுள்ள திரவியங்களாலேனும், திரு அலகிடுதல் முத லிய சரீர வியாபாரத்தாலேனும், தேவாலயத்திற்கு நன்மையை விளைவிக்கும் வாக்ஸஹாயத்தாலேனும் பணியைச் செய்து ஸேவிக்கவேண்டும்.

## சிவ கைங்கரிய பலன்.

அசிந்தியவிசுவஸாதாக்ய மென்னு மாகமத்திற் கூறுவதாவது:- புஷ்பங்களை அன்புடன் சிவபெரு மானுக்கு * அர்ப்பணஞ் செய்கிறவர்கள் சிவலோ கத்தில் பூஜிக்கப்படுவார்கள்.

நந்தவனத்தைப் பயிர் செய்து சிவபெருமா னுக்கு அர்ப்பணம் செய்கிறவர்கள் இம்மையில் தனி கர்களாகவிருந்து மறுமையில் ருத்ர பதத்தை அடை வார்கள்.

---

* அர்ப்பணம்—கொடுத்தல்.

விடியற்காலத்தில் முஷ்டி அளவு அறுகம்புல்லைச் சிவபெருமானுக்காக அர்ப்பணம் செய்கிறவர்கள் வறுமையினின்று விடுபட்டு சிவலோகத்தில் பூஜிக்கப் படுவார்கள் (முஷ்டி = கைப்பிடி.)

பஞ்சகவியத்தைச் சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்கிறவர்கள் சுவர்ண விமானத்துடன் ருத்ரலோகத்தில் பூஜிக்கப்படுவார்கள்.

கபில நிறமுடைய பசுவினது பஞ்சகவியத்தைச் சக்திக்குத் தக்கவாறு பரமசிவனுக்கு அபிஷேகம் செய்கிறவர்கள் ருத்ர பதமடைவார்கள்.

ஆகமங்களிற் கூறப்பட்டபடி 0 ஸ்நபனங்களைச் சிவபெருமானுக்குச் செய்கிறவர்கள் பற்பல போக பாக்கியங்களைப் பெற்று சிவலோகத்தில் பூஜிக்கப் படுவார்கள்.

நதியிலுள்ள குளிர்ந்த தீர்த்தத்தை வாசனைத் திரவியம், புஷ்பங்களுடன் பரமசிவனுக்கு அபிஷேகம்

---

0 ஸ்நபனவிதிப்படி மந்திரத்துடன் அபிஷேகஞ் செய்தல்.

செய்கிறவர்கள் ருத்ர பதத்தை அடைவார்கள். சிவாலயத்தில் யாதானுமொரு காலத்தில் ஹவிஸ்ஸை (அன்னத்தைப்) பரமசிவனுக்கு அர்ப்பணஞ்செய்கிறவர்கள் இம்மையில் ஸ்ரீமானாகவிருந்து இறுதியில் மோக்ஷத்தை அடைவார்கள்.

சங்கு, சாமரம், வாத்யம், கண்ணாடி, குடை வஸ்திரம், சுவர்ணம்-வெள்ளி-தாம்ர பாத்திரங்கள் இவற்றைச் சிவாலயத்திற்கு அளிப்பவர்கள் வறுமையினின்று நீங்குவார்கள்; பின்னர், ருத்ரராகவும் ஆவார்கள்.

சிவாலயத்திற்கு மஹாகண்டை அதாவது பெரிய மணி செய்து வைப்பவர்கள் கீர்த்தி, ஐசுவரியம், வறுமையின்மை இவற்றை அடைவார்கள்.

ஆஸனம், பள்ளியறைக்குரிய மெத்தை-தலையணை முதலியன, குதிரை, சிபிகை இவற்றைச் சிவாலயத்திற்கு அர்ப்பணம்செய்கிறவர்கள் சிவஸாமீப்யமடைவார்கள்.

பிராசாதம், விமானம், மண்டபம், மதில், கோபுரம் இவற்றைத் திருப்பணி செய்பவர்கள் சிவஸாரூப்யபத மடைவார்கள்.

ஆபரணம், தீபம், சந்தனம் இவற்றைச் சிவ பெருமானுக்கு அளிப்பவர்கள் கீர்த்தியுள்ளவர்களாகவும், புஷ்டியுள்ளவர்களாகவுமிருந்து இறுதியில் சிவனடி சேர்வார்கள்.

நீர் பாயக்கூடிய பசுவின் தோலளவான அவ்வளவு சிறிய பூமியையேனும் சிவபெருமானுக்குத் தானம் செய்கிறவர்கள் எல்லாத் தானங்களையும் செய்த பலனை அடைவார்கள்; எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுவார்கள்.

சிவாலயத்திற்கு மரங்களை அளிப்பவர்கள் எல்லாப் போகங்களையும் அனுபவிப்பார்கள்.

வாபீ, (நடை கிணறு) கூபம், தடாகம் இவற்றைச் சிவபெருமானுக்கு நிர்மாணஞ் செய்கிறவர்கள் தனவந்தர்களாக வெகுகாலமிருந்து இறுதியில் சிவனடி சேர்வார்கள்.

சிவாலயத்தில் ஒரு நாளேனும் திருவலகிடுதலா கிய கைங்கரியத்தைச் செய்கிறவர்கள் சாந்திராயணத் தை அநுஷ்டித்த பலனை அடைவார்கள்; பதினைந்து தினங்கள் திருவலகிட்டால் தேவர்களின் கணக்குப் படி நூறு கோடி வருஷம் ருத்ரலோகத்தில் பூஜிக்கப் படுவார்கள்.

தயிரை லிங்கத்திற்கு அபிஷேகம் செய்பவர் கள் விஷ்ணுலோகத்தில் பூஜிக்கப்படுவார்கள்.

தேனை லிங்கத்திற்கு அபிஷேகஞ் செய்பவர்கள் எல்லாப் பாபங்களினின்றும் நீங்குவார்கள்.

கருப்பஞ்சாற்றினல் அபிஷேகஞ் செய்பவர்கள் அரசனுக ஆவார்கள்.

எண்ணெயை அபிஷேகஞ் செய்பவர்கள் வாயு லோகத்தில் பூஜிக்கப்படுவார்கள்.

பழச்சாற்றினல் லிங்கத்திற்கு அபிஷேகஞ்செய் பவர்கள் எல்லாப் பாபங்களினின்றும் நீங்குவார்கள்.

விதிப்படி தயாரித்த வெண்மையான விபூதியைச் சிவபெருமானுக்குச் சாத்துபவர்கள் (அபிஷேகம்

செய்பவர்கள்) சிவலோகம் முதலிய லோகங்களில் பூஜிக்கப் படுவார்கள்.

சிவபெருமானுக்கும், தமது ஆசிரியருக்கும் சிறிதளவு சுவர்ணம்-இரத்தினங்களைச் சமர்ப்பித்தால் இந்திரபதம், பிரமலோகம் இவற்றை அடைவார்கள்

சிவபெருமானுக்குத் தூபம் சமர்ப்பித்தால் "லக்ஷ்மீபதியாக" (ஸ்ரீமானாக) ஆவார்கள்.

வாசனையுள்ள சந்தனத்தைச் சிவபெருமானுக்கு ஒரு தடவை அபிஷேகம் செய்பவர்கள் கோடி வருஷங்கள் ருத்ர லோகத்தில் பூஜிக்கப்படுவார்கள்.

சங்கு, புல்லாங்குழல் முதலிய வாத்யங்களைச் சிவபெருமானுக்கு அர்ப்பணம் செய்பவர்கள் சிவபெருமானுக்குச் சமமான பலத்துடன் அனேக கற்ப காலங்கள் சுகமாகச் சிவலோகத்தில் வாஸம் செய்வார்கள்.

பரமசிவனைக் குறித்து மிகுந்த பக்தியுடன் ஸ்தோத்திரம் செய்பவர்களின் ஸ்தோத்திரங்களையும், கானம் செய்பவர்களின் கானங்களையும் சிரவ

ணம் செய்யும் அதாவது கேட்கும் விருக்ஷம்-புழு முதலியனவும் சிவஸாலோக்யத்தை அடையுமாயின் ஸ்தோத்திரம் செய்கிறவர்களையும், கானஞ் செய்கிறவர்களையும் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ.

பரமசிவனுக்கு நர்த்தனம் செய்பவர்கள் சிவலோகத்தில் அப்ஸரஸ்த்ரீகளின் நர்த்தனம்-கீதம் முதலியவற்றால் நித்யமாக ஆநந்திக்கப்படுவார்கள் என்பதாம்.

இன்னும், பல சிவ கைங்கரியங்களுக்குப் பலன்கள் சிவாகமங்களில் பலவிடங்களில் கூறப்பெற்றிருக்கின்றன.

சிவாலயப் பிரதக்ஷிண நமஸ்கார விதி

முற்றிற்று.

சுபமஸ்து!

சிவபெருமான் திருவடி வாழ்க.

# குறிப்பு.

24-வது பக்கம் 19-வது வரியில் "நடுவிலும் செல்லக்கூடாது" என்பதை "நடுவிலும், ஒரே பிரா காரத்திலுள்ள தேவி ஆலயத்திற்கு இடையிலும் செல்லக்கூடாது" என்றும், 27-வது பக்கம் 19-வது வரியில் "வணங்கினுல் அதிகமாகப் பலன்கள்" என் பதை "வணங்கினுல் பலன்கள்" என்றும் கொள்ள வேண்டும்.

உ

| | |
|---|---|
| சிவார்ச்சனா சந்திரிகை (நாகரம்) | ரூ. 1—0—0 |
| ஷை தமிழ் மொழி பெயர்ப்பு | ரூ. 1—8—0 |
| அஷ்டப் பிரகரணம் (நாகரம்) | ரூ. 2—8—0 |
| ஷை தமிழ் மொழிபெயர்ப்பு | ரூ. 3—0—0 |
| மதங்க பாரமேசுவராகமம் (நாகரம்) | ரூ. 1—0—0 |
| சம்பு பூஜாவிதி (கிரந்தம்) | ரூ. 0—6—0 |
| சைவ பூஷணம் (தமிழுரையுடன்) | ரூ. 1—0—0 |
| சைவ சித்தாந்த பரிபாஷை (நாகரம்) | ரூ. 0—8—0 |
| ஷை தமிழ்மொழி பெயர்ப்பு | ரூ. 0—8—0 |
| மிருகேந்திராகமம் (நாகரம்) | ரூ. 5—0—0 |
| சிவாலய நித்ய பூஜாவிதி (கிரந்தம்) | ரூ. 1—0—0 |
| ஷை தமிழ் மொழிபெயர்ப்பு | ரூ. 1—0—0 |
| சோம சம்பு பத்ததி (நாகரம்) | ரூ. 2—8—0 |
| ஷை தமிழ்மொழி பெயர்ப்பு | ரூ. 2—8—0 |
| கிரணாகம மஹாதந்திரம் (கிரந்தம்) | ரூ. 2—8—0 |
| சைவகால விவேகம் (கிரந்தம்) | ரூ. 1—4—0 |
| சிவ பூஜாஸ்தவம் (நாகரம்) | ரூ. 1—0—0 |
| வேறு பதிப்பு-சிவாக்ர பாஷ்யம் (கிரந்தம்) | ரூ. 3—8—0 |
| ,, உபமந்யு பக்த விலாசம் (கிரந்தம்) | ரூ. 2—0—0 |

தபாற் சிலவு வேறு.

ரூ. 10-க்குமேல் 25% கமிஷன் கொடுக்கப்படும்.

அள. சுப. பள. சுப்பிரமணியஞ் செட்டியார்,

சிவாகம சங்கம், தேவகோட்டை.